**செய்தி வெளியீடு எண்: 605** **நாள்: 11.10.2012**

புதிய குடும்ப அட்டைகள் பெறுதல், மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்ட முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன் படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சென்னையில் 16 மண்டல பகுதிகளில் மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் குறிப்பிட்டுள்ள மையங்களில் அக்டோபர் 2012 மாதத்திற்கான மாதாந்திர குறைதீர் கூட்ட முகாம் 13.10.2012 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி வாழும் பொது மக்கள் புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக திட்ட பொருள்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள 16 மண்டல பகுதி வாழ் பொது மக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ.எண் | மண்டலம் | கூட்டம் நடைபெறும் இடங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | விவேகானந்தா பெண்கள் மேல்நிலைப்பள்ளி,<br>எண் 2, சரவண முதலி தெரு, கொண்டித்தோப்பு, சென்னை - 79<br>( அரசு அச்சகம் அருகில்) |
| 2 | இராயபுரம் | சென்னை மேல்நிலைப்பள்ளி<br>எண் 39, அப்பாசாமி தெரு, தண்டையார் பேட்டை, சென்னை – 21<br>தண்டையார்பேட்டை மணிகூண்டு அருகில்) |
| 3 | பெரம்பூர் | அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளி,<br>பனந்தோப்பு ரயில்வே காலனி, அயன்புரம், சென்னை – 23 |
| 4 | அண்ணாநகர் | சென்னை மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி,<br>எண் 35, சின்னபாபு தெரு, நம்மாழ்வார்பேட்டை, சென்னை - 12 |
| 5 | அம்பத்தூர் | ஸ்ரீ கிருஷ்ணம்மாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,<br>எண் 1வது பிளாக், முகப்பேர் கிழக்கு, சென்னை – 37<br>( ஜெ.ஜெ நகர் காவல் நிலையம் அருகில்) |
| 6 | வில்லிவாக்கம் | அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி,<br>சிட்கோ நகர் மெயின் ரோடு , வில்லிவாக்கம், சென்னை - 49,<br>(சிட்கோ நகர் தீ அணைப்பு நிலையம் எதிரில்) |
| 7 | திருவொற்றியூர் | குழந்தை ஏசு மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,<br>மணலி புது நகர் பொன்னேரி நெடுஞ்சாலை, சென்னை – 103<br>(குழந்தை ஏசு ஆலையம் அருகில்) |
| 8 | ஆவடி | டி.என்.எஸ்.எல் மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளி,<br>எண் 11/23 ராஜீவ்காந்தி நகர் மெயின் ரோடு, CRPF ஆவடி,<br>சென்னை – 65 , ( CRPF கேம்ப் எதிரில்) |
| 9 | தி.நகர் | புண்ணியகோடி கல்யாண மண்டபம்,<br>எண் 1, சக்கரபாணி தெரு விரிவு, மேற்கு மாம்பலம், சென்னை - 33 |
| 10 | மயிலாப்பூர் | அடையார் சாஸ்திரி நகர் நலச்சங்கம், 6வது குறுக்கு தெரு, சாஸ்திரி நகர், சென்னை - 20 |
| 11 | பரங்கிமலை | AJS நிதி நடுநிலைப்பள்ளி,<br>ஆலந்தூர் , சென்னை - 16, பரங்கிமலை ரயில் நிலையம் அருகில் |
| 12 | தாம்பரம் | அரசினர் மேல்நிலைப்பள்ளி, அனகாபுத்தூர், சென்னை - 70 |
| 13 | சைதாப்பேட்டை | சென்னை தொடக்கப்பள்ளி, 47/1 பூந்தமல்லி சாலை, ஈக்காட்டு தாங்கல் , சென்னை - 32 |
| 14 | ஆயிரம்விளக்கு | புனித ஜோசப் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப்பள்ளி,<br>31, வேப்பேரி நெடுஞ்சாலை, பெரியமேடு, சென்னை - 3 |
| 15 | சேப்பாக்கம் | சென்னை நடுநிலைப்பள்ளி, 190, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, திருவல்லிக்கேணி, சென்னை – 5 |
| 16 | சோழிங்கநல்லூர் | அரசினர் மேல்நிலைப்பள்ளி, ஒக்கியம் , துரைப்பாக்கம், பழைய மகாபலிபுரம் ரோடு, துரைப்பாக்கம், சென்னை - 97, (துரைப்பாக்கம் சிக்னல் அருகில்) |

ஒம்/- பெ.மு.பஷீர் அஉறமது
ஆணையாளர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**